**கித்துள் அபிவிருத்தி சபை - 2022**

**-----------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கித்துள் அபிவிருத்தி சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளிற்கு உரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கு உரித்தான குறிப்புகளுடனான 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரச்சட்டம், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் நிதிக்கூற்றுக்களின் மூலம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் அன்றி தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுற்படுத்தப்பட்டுள்ளன. தவறாகக் காண்பிப்பதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடியால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் அவை தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காண்பிப்பதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கம் இல்லாத போதிலும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக பணியகத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான்

முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக இருக்குமாயிருந்தால் எனது அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்திற்கு உரிய தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல. 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சபையால் 2022 ஏப்ரல் மாதம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 378,891 கூட்டுத்தொகையான தளபாடங்கள் மற்றும் பொருத்திகளுக்கு உரித்தான வகையில் தேவையான பெறுமானத்தேய்வு ஒதுக்கம் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. | நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தொகுதி தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 திசெம்பர் மாதத்திற்கு உரிய ரூபா 631,236 கூட்டுத்தொகையான செலவுகள் 2023 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளுக்காக உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | செலவினங்களுக்கான சீராக்கங்கள் காலரீதியாக மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் ஆகியவற்றிற்கு இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய திறைசேரி செயலாளரின் 01/2021 ஆம் இலக்க அரசாங்க பொறுப்பு முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் அதற்கு இணையாக விநியோகிக்கப்பட்ட நிறுவன நல்லாட்சி தொடர்பான வழிகாட்டிக் கோவை | 2022 ஆம் 2024 ஆம் ஆண்டுகளுக்கான மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் சுற்றறிக்கையின் பிரகாரம் வியாபாரச் செயற்பாடுகளின் இறுதி விளைவுகள் மதிப்பீட்டிற்காக பிரதான செயலாற்றல் சுட்டிகள் இனஙகாணப்பட்டிராததுடன் திட்டத்தில் காண்பிக்கப்பட்ட காலப்பகுதிக்காக பொழிப்பாக்கப் பட்ட எதிர்வுகூறப்பட்ட நிதிக்கூற்றுக்களும் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. மூலோபாயத் திட்டத்திற்காக சுற்றறிக்கையின் படி குறித்த அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. | இச்சபையினால் 2022 - 2024 கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்காக வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வில்லை. | தொடர்புபட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் மூலோபாயத் திட்டதைத் தயாரித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பீஈடீ 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பந்தி | கணக்காண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் வரைவு வருடாந்த அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டிற்கு உரிய கணக்குகள் 2025 மார்ச் 20 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் தாமதக் காலம் 02 ஆண்டுகளாகும். | நிதிக்கூற்றுக்களில் உள்ள குறைபாடுகள் சீராக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களும் வரைவு வருடாந்த அறிக்கையும் குறித்த தினத்தில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கித்துள் அபிவிருத்திச் சபையை ஸ்தாபிப்பதற்குரிய 2021 மார்ச் 17 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட காணிகளில் கிதுல் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்காக உதவிகளை வழங்குதல், மேம்படுத்துதல், கித்துள் பயிர்ச்செய்கை மேற்கொள்கின்ற காணிகளில் கால்நடை வளர்ப்புக்கட்டுப்பாடுகளில் ஈடுபடுவதை ஊக்குவித்தல், கிதுல் பயிர்ச்செய்கைகளில் தென்னை மற்றும் ஏனைய பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வது தொடர்பாக ஊக்குவித்து மேம்படுத்துதலும் கித்துள் உற்பத்திப் பொருட்களை தயாரித்தல் மற்றும் அது தொடர்பாக உதவியளித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் இது வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆகக்குறைந்த ஆளணியினர் காணப்படுவதன் காரணமாக வர்த்தமானி அறிவித்தலின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அனைத்து செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கமுடியாதுள்ளது. | கித்துள் அபிவிருத்திச் சபையினை ஸ்தாபிக்கும் ஆரம்பக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான செயற்பாடுகளை அமுற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் 20 கித்துள் தொழில் முயற்சியாளர்களுக்கு GMP மற்றும் SLS சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கும் உரிய தொழில்நுட்பம் மற்றும் உற்பத்திப் பொருட்களை சர்வதேச சந்தைகளுக்காக மேம்படுத்துவதற்கு நிதி உதவிகளை வழங்குதல், உள்நாட்டில் கித்துள் மரங்களின் அளவை அதிகரித்து வணிகச் செயற்பாட்டிற்காக மாற்றுவதற்கான நாற்றுமேடைகளை அபிவிருத்தி செய்தல் ஆகிய செயற்பாடு களுக்காக ரூபா 8,550,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் அமுற்படுத்தபடாதிருந்ததுடன் அத் தொகையில் ரூபா 7,750,000 தொகை அதாவது 90 சதவீதம் சேமிப்பாக இருந்தது. | போதியளவு ஆளணியினர் இன்மையால் இச் செயற்திட்டம் அமுற்படுத்தப் படவில்லை. பொருத்தமான விதை இனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நாற்றுமேடை உரிமையாளர்களுக்கு தெரியப்படுத்தியிருந்தும் விளைச்சலற்ற காலத்தில் (off Season) பூக்களை தேடிக்கண்டு பிடிப்பது சிக்கலாக இருந்தமையால் கித்துள் மரங்களின் அளவை அதிகரித்து வணிகச் செயற்பாடாக மாற்றுவதற்காக நாற்று மேடைகளை அபிவிருத்தி செய்ய இயலாது போயிற்று. | திட்டமிடப்பட்ட செயற் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளுக்காக ஆரம்ப சாத்தியவள ஆய்வின் மூலம் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தும் இயலுமையை ஆய்வு செய்து நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கித்துள் | போதியளவு நிதி இன்மை மற்றும் போதியளவு | ஆக்கபூர்வமாக வருடாந்த திட்டங்களைத் தயாரித்து |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்தியாளர்களுக்காக ஆயுள் காப்புறுதி முறைமையை அறிமுகப்படுத்தி புதிய சந்தையை அறிமுகப்படுத்துதல் ஆகிய இரண்டு செயற்பாடுகள் தொடர்பாக ரூபா 17,000,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 2023 ஆம் ஆண்டின் போது எதிர்பார்த்த மாதிரி கித்துள் தோட்டத்தை ஸ்தாபித்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆளணியினரை இணைத்துக்கொள்ளல் இடம்பெற்றிருக்காமையின் காரணமாக செயற்திட்டம் அமுற்படுத்தப்படவில்லை. அவ்வாறே, இதுவரை ஆரம்பிக்கப்படாத அல்லது கடப்பாடுகள் உருவாக்கி கொள்ளப்படாத செயற்திட்டங்களை தற்காலிகமாக கைவிடுவதற்கு 3/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறக்கை வழங்கிய அறிவுறுத்தல்களின் படி அமுற்படுத்தப்படவில்லை. இவ்வாறே, மாதிரி கித்துள் தோட்ட செயற்திட்டத்திற்கு ஏற்ற காணி ஒன்றைப் பெற்றுக்கொள் இயலாது போயிற்று. | திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் செயல் முன்னேற்றத்தை சிறந்த மட்டத்தில் பேணுதல் வேண்டும். |
| (ஈ) | கித்துள் அபிவிருத்திச் சபையின் எதிர்காலப் பயணப் பாதையை வெளிப்படுத்தல் உள்ளடங்கலாக கித்துள் அபிவிருத்திக்கு உரிய ஏனைய பல செயற்பாடுகள் சிலவற்றை உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டம் ஒன்று 2022 செப்தெம்பர் 29 ஆம் திகதி காலியில் நடாத்தப்பட்டு இதற்காக ரூபா 4,052,850 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை பிராந்திய மட்டத்தில் சபையின் செயற்பாடுகளை விரிவுபடுத்தி கித்துள் விவசாயிகள் சங்கங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டிராமையால் அதன் மூலம் நிறுவனத்தின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு போதியளவான பங்களிப்பு கிடைத்திருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் கித்துள் அபிவிருத்திச் சபையைத் தோற்றுவிக்கப்பட்டமையால் பிராந்திய மட்டத்தில் கித்துள் விவசாயிகளை அடையாளங்காணப்பட்டு தேவையான வசதிகளை வழங்குதல், கித்துள் அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளை பிராந்திய மட்டத்தில் விரிவுபடுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டியதான பிரதான செயற்பாடுகளாகும். அதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துதல் அத்தியவசியமான விடயமானதுடன் இதன் மூலம் கித்துள் அபிவிருத்திச் சபையின் எதிர்கால செயற்பாடு களைத் திட்டமிடுவதற்கு தேவையான தரவு முறைமையை தயாரிப்பதற்கும் துறையின் அபிவிருத்திக்கான ஒரு அடித்தளத்தை இடுவதற்கும் உதவியாக அமைந்துள்ளது. | கித்துள் அபிவிருத்திச் சபையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு இயலுமான வகையில் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிட்டு அமுற்படுத்தப்பட வேண்டும். |

**3. ஆளணி நிருவாகம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கித்துள் அபிவிருத்திச் சபையின் அங்கீகரித்த ஆளணியில் காணப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் பதவி, 15 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் மற்றும் 09 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வெற்றிட நிலையில் காணப்படுவதனாலும் பொது முகாமையாளர் மற்றும் 04 உதவி/ பிரதி முகாமையாளர் பதவிகள் பதில் கடமை உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்படுவதனாலும் தேவையான பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இச்சபை 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் அவ்வப்போது நிதி அமைச்சினால் அரசாங்க செலவுகளை மட்டுப் படுத்துவதற்காக விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரை ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள முடியாது போயிற்று. 2023-11-22 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப் பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டளவில் 05 முகாமைத்துவ உதவி (தொழில்நுட்பமற்ற) உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். | சபையின் செயற்பாடுகளை முறைப்படியாக நிறைவேற்றுவதற்கு அத்தியாவசியமான பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக் களைத் தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். |